**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.472/2014**

**தேதி : 18.02.2026**

**(வா.சா.1 ) – திருமதி. தமிழரசி**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (3ம் பிரதிவாதி தரப்பில்)**

1. இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தாவாச்சொத்து வேண்டும் என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி ஈஸ்வரி என் மாமியார். வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள உயில் பதிவு செய்யப்படாதது என்றால் சரிதான். வழக்கு நான் முன்னிலையாகாததால் 2021ம் வருடம் தள்ளுபடியானது என்றால் சரிதான். வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க மனு செய்து வழக்கானது 09.07.2024 அன்று வழக்கு மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அங்கணனின் மனைவிதான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான்.

2. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பின்னர்தான் எனக்குத் தெரிய வந்தது. அந்தக் கிரைய ஆவணம் செல்லாது. வழக்கு தள்ளுபடியானபின்னர்தான் கிரைய ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஈஸ்வரியிடமிருந்து கிரையம் வாங்கிய செந்தில்குமார் அதனை 3ம் பிரதிவாதி வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்ற விபரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். மேற்படி கிரையமும், அடமானமும் சட்டப்படியானது என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :– இல்லை.

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2026.02.18 18:49:25 +0530

Additional Sub Judge,
Palani.